Rolls of the personnel to decide seniority, etc., to enable them to issue orders. Necessary instructions have been issued to the Superintending Engineer and the Director, Highways Research Station to finalise scrutiny and issue early orders.

அரிசன காலனிக்காக வீட்டு மனை (திண்டுக்கல் தாலுகா).

*635 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தாலுகா பாளையம், மதுரா, பள்ளப்பட்டி கிராமங்களில் அரிசன காலனிக்காக வீட்டு மனை ஆர்ஜிதம் செய்ய உத்தேசமுண்டா ?

(இ) அந்தக் கிராமத்தில் எத்தனை தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் இருக்கின்றன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம். திண்டுக்கல் தாலுகாவைச் சேர்ந்த பாளையம் கிராமத்தில் குக்கிராமமாகிய பள்ளப்பட்டியிலுள்ள ஹரிஜனங்களுக்காக வீட்டு மனைகளை ஆர்ஜிதம் செய்வதற்கு கலெக்டரிடமிருந்து வேலைத் திட்டம் எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) மேற்படி கிராமத்தில் சுமார் 100 ஹரிஜனங்கள் வசிக்கின்றனர்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சார், பள்ளப்பட்டி கிராமத்திலிருக்கும் நத்தமே மேலும் ஒரு 100 குடிகளுக்கு அஸைன் செய்யும் அளவுக்கு நிலம் இருந்தும், சாதி இந்துக்கள் பள்ளர்களை விலக்க வேண்டும், பள்ளர்கள் தனியாக வசிக்க வேண்டும் என்ற காரணத்தினால், ஒரு சேரியை உற்பத்தி பண்ண வேண்டும் என்று அரசாங்கத்தை இந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள் என்பது உண்மையா ? இதில் அரசாங்கம் நல்ல நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் சொல்வது எப்படி என்று தெரியவில்லை. நான் அந்த ஜில்லாவாசி. விவரம் எப்படி வந்தது என்று தெரியவில்லை. ஏற்கனவே அரிஜனங்களுக்கு ஒரு இடம் பார்த்து இருந்தார்கள். எப்படியோ அந்த நிலத்தை கிருஷ்ணசாமி சேர்வை என்பவர் அஸைன்மெண்ட் வாங்கி விட்டார்கள். அவர் அந்தஸ்து உள்ளவர்தான், பாகப்பிரிவினையின்போது அவருடைய அண்ணச்சி பணக்காரராகவும், இவர் ஏழையாகவும் ஆகிவிட்டார். அதனால் இதை அவருக்குக் கொடுக்கலாம் என்று கொடுத்து விட்டார்கள். ஆனாலும் இப்பொழுது அதே இடத்தை அரிஜனங்களுக்காக அக்வயர் பண்ண ஏற்பாடு செய்திருக்கிறோம். ஏதோ அரிஜனங்களுக்குக் கஷ்டம் கொடுக்க வேண்டும் என்று செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

22nd July 1964]

திரு. ப. உ. ஷண்முகம் : ஒருவருக்கு அடமானம் செய்து விட்டு மீண்டும் அதையே சர்க்கார் விலை கொடுத்து வாங்குவது சரியா ? அடமானம் செய்யும் போதே அதைப்பற்றி யோசிக்க வேண்டாமா?

கனம் திரு. பூ. கக்கன் : சில அதிகாரிகள் செய்துவிட்டார்கள். அதை எவ்வாறு செய்ய வேண்டுமோ அவ்வாறு செய்ய அரசாங்கம் முன்வந்திருக்கிறார்கள்.

திரு. மா. இராசாங்கம் : சார், கனசேர்வைப் பட்டியில் . . .

MR. SPEAKER : No, let the hon. Member ask about Palayam.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது சாதி இந்துக்களுக்கு ஆட்சேபணை இருக்கிறதா என்று கேட்கப்படுகிறதா ? அப்படி கேட்கவேண்டும் என்று ஆர்ஜிதம் செய்யும் அதிகாரிகளுக்கு அரசாங்கம் ரகசிய உத்தரவு போட்டிருப்பது உண்மையா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஜாதி இந்துக்களுக்கு ஆட்சேபணை இருக்கிறதா என்று கேட்பதில்லை. ஆனால் பொதுவாக ஏதாவது ஆட்சேபணை இருக்கிறதா என்று பார்க்கிறோம்.

கூட்டுறவு முறையில் வீடுகட்டும் திட்டம்

*634 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் எத்தனை தாலூகாக்களில் கூட்டுறவு முறையில் வீடுகள் கட்டும் திட்டம் அமுலில் இருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பன்னிரெண்டு வட்டங்களிலும் கூட்டுறவு முறையில் வீடுகள் கட்டும் திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், தலை நகரங்களில் கூட்டுறவு முறையில் வீடு கட்டும் திட்டம் இருக்கிறது. அதை கிராமப்புறங்களுக்கும் விஸ்தரிக்க ஆலோசிக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த ரூரல் கோவாப்பரேடிவ் ஹவுசிங் ஸ்கீம் பஞ்சாயத்திலே செய்யவேண்டும்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, இந்த ரூரல் ஹவுசிங் ஸ்கீம் கிராம நத்தம் புறம்போக்கில் வீடு கட்டுபவர்களுக்கு சரியான டைட்டில் கொடுக்க முடியாத சூழ்நிலை இருப்பதால்தான் "failure" ஆகிறது என்பதை அரசாங்கம் உணருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இத்தனை இடைஞ்சல்களும் இருந்துதான் அது எப்படியோ 'சக்சீட்' ஆகவேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், இவ்வளவு இடைஞ்சலுக்கும் மத்தியில் சில சொசைட்டிகள் இயங்குவது ஆச்சரியம்தான். அதிலேகூட அவைகளுக்கு அறவே பணம் ஒதுக்குவது இடை